RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s611

# மணிமேகலையில் அரசியல் நிலைப்பாடுகள்

**சி. மதியழகி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் - 636 011, தமிழ்நாடு, இந்தியா

# Political Positions in the Manimekalai

**C. Mathiazahi** [a, *]

[a] Department of Tamil, Padmavani Arts and Science College for Women, Salem – 636 011, Tamil Nadu, India

* Corresponding Author: mak17c@gmail.com

Received: 11-09-2021
Revised: 26-04-2022
Accepted: 10-05-2022
Published: 15-07-2022

Check for updates

**ABSTRACT**

The Manimegalai epic covers various social politics. The politics of the hour are seen in a different light than the politics of the time. During this period various religions and new rulers entered Tamil Nadu and created a chaotic politics. The epic features the politics, morals, monasticism, and Buddhist influence of the rulers. The influence of Vedic religion in the Milky Way, the impact of Buddhism in the Cauvery Basin and the impact of Jainism in the Madurai region shaped the social life of the people. Poompuhar was a city of historical significance in ancient times. Morality was held in that city. The king and the people lived equally without distinction. The king lived for the people. The news about the two kings, Karikarsolan and Manunithi Cholan, is indelibly etched in the minds of the people. Poompuhar has been a city of historical significance since ancient times. The city of Poompuhar is known to have been the first place of influence for Buddhism. Sittalaichattanar mentions such a special city in the first ear. They record that the city was ruled by a moral ruler and that the king and his people lived equally without distinction. It is said that people from different sections have come together for the Indira festival to be held in Poompuhar city.

**Keywords:** Manimegalai, Social politics, Milkway Galaxy, Sangam Literature

## முன்னுரை

மணிமேகலை காப்பியம் முதலிற் தோன்றிய பௌத்தச் சமயக் காப்பியம். இக்காப்பியத்தின் ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார். இது நீண்ட நெடிய தொடர்நிலைச் செய்யுலாகும். காப்பிய கதையில் முதன்மைக்கதை, கிளைக்கதை, பெருநிகழ்வு, சிறுநிகழ்வு, பல்வேறு வரலாற்று இடங்கள், சமூகவியல் பதிவுகள், குடிமக்கள் பதிவு என்று பல்வேறு சிறப்புகள் மணிமேகலை, காப்பியத்தில் பதிவாகியுள்ளன. இக்காப்பியம் துறவு வாழ்க்கையை மையமாக கொண்டு எழுந்த காப்பியம். இரண்டாம் நூற்றாண்டில் காணப்பட்ட அரசியல் சூழல்கள், வணிகர்களின் நிலைபாடுகள், மன்னனின் கடமைகள், மன்னனும் மக்களும் ஒன்றுபட்டு இருந்த நிலைகள், மன்னனின் நோக்கம், நீதி தவறாத மன்னர்களின் அறநெறிகள் போன்றவற்றை இவ்வாய்வுக் கட்டுரை மூலம் அறியலாம்.

## அரசியல் சூழல்கள்

மணிமேகலை காப்பியத்தை ஓர் இலக்கியமாக மட்டும் பார்க்க முடியாது. இக்காப்பியத்துள் பல்வேறு சமூக அரசியல் சூழல் பதிவாக்கப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் சங்ககால அரசியல் சூழல் வேறு மணிமேகலை சங்ககாலத்தின் முடிவும், சங்க மருவிய காலத் தொடக்கம் என்ற சூழலில்

உருவான காப்பியமாகும். “சங்ககால அரசியல், சமய நோக்கிலும் சமூக நடைமுறையிலும் பெரும் மாறுதல் காணப்படுவதனால் இதனை, சங்ககாலத்திலிருந்து வேறுபடுத்தி அணுகுகின்றோம்” என்ற கருத்து இங்கு நினைத்தற்பாலது (Sellam, 2007).

வணிகவர்க்கம் சிதைந்து அழிந்து கொண்டிருந்த காலமிது. வணிகவர்க்கம் நன்னெறியில் தழைத்தோங்க வேண்டுமென்று பௌத்தம் விரும்பியது. ஆகையால்தான் பௌத்த சமய இலக்கியங்களில் வணிகர்களின் வாழ்வியல் பதிவாக்கப்பட்டிருக்கின்றன. அவர்களின் பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றன.

சங்ககாலச் சமூகம் சிதைந்து சங்கம் மருவிய காலம் தொடங்கிய சூழலில் சிலப்பதிகாரம், மணிமேகலை காப்பியங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. சங்க மருவிய காலம் அரசியல், பொருளாதாரம், சமூகத்தில் தெளிவற்ற சூழல் நிலவிய காலம். அதாவது, கி.பி. இரண்டாம் நூற்றாண்டு காலகட்டம், தமிழகத்தில் பல்வேறு சமயங்களும் புதிய ஆட்சியாளர்களும் நுழைந்து ஒரு குழப்பமான சூழல் இருந்திருக்கின்றது. மணிமேகலை என்கின்ற பௌத்த காப்பியம் எழுந்த காலக்கணிப்பில் அறிஞர் பெருமக்கள் வேறுபடுகின்றனர். கி.பி. இரண்டாம் நூற்றாண்டோ அல்லது கி.பி. நான்காம் நூற்றாண்டோ எதுவானும் சங்க மருவிய காலக்கட்டம் என்பதில் எள்ளவும் ஐயமில்லை. “கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற மணிமேகலைக் காப்பியம் ஒரு பௌத்த சமயப் பிரச்சார நூலாக விளங்கியது. அன்று இளங்கிள்ளி என்ற சோழமன்னன் காஞ்சியை ஆண்டான். அவன் காஞ்சியில் பௌத்தப்பள்ளி கட்டியுள்ளான். கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடையில் கட்டப்பட்ட பௌத்த விகாரத்தின் அடித்தளத்தைத் தற்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் தொல்லாய்வினர் கொண்டு வந்துள்ளனர்” என்று அறியமுடிகிறது (Sellam, 2007).

இதனுடைய தாக்கம் மணிமேகலைக்காப்பியம் முழுவதிலும் இருக்கின்றது. புகார் நகரம், ஆட்சியாளர்களின் அறநெறி அரசியல், பௌத்தசமயம் செல்வாக்குப் பெற்ற இடங்கள் ஆகியவை மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெற்றிருக்கின்றன.

“பாலாற்றுப் படுகையில் வெற்றிகொடி நாட்டிய வைதீக சமயத்தின் தாக்கமும், காவிரிப்படுகையில் வெற்றி நடையிட்ட பௌத்தத்தின் தாக்கமும், மதுரை மண்டலத்தைப் பற்றிப் பிடித்த சமணத்தின் தாக்கமும் பிற்றைய உலகை முன்னிறுத்திச் சமயச்சம்பிரதாயங்களும் அடிபணிந்த சமூக வாழ்க்கையை உருவாக்கின.” (Sellam, 2007)

மணிமேகலைக் காப்பியம் எழுந்த காலகட்டத்தில் சமூகநிலை குழுப்பம் நிறைந்ததாக இருந்திருக்கின்றது. சமண, பௌத்த சமயங்களின் போட்டியும் பூசல்களும், தனிமனித ஒழுக்கச் சிதைவு, வேற்றுநாட்டவரின் படையெடுப்பும் ஆதிக்கமும் இருந்துள்ளன. சமயவாதிகளுக்கும், ஆட்சியாளர்களுக்கும், இலக்கியவாதிகளுக்கும் மிகப்பெரிய பொறுப்பும் கடமையும் இருந்திருக்கின்றன.

“சமூக உருவாக்கம் என்பது, சமூக உறவுகளின் பன்முகப்பட்ட கட்டமைவினை, சமூகத்தின் பொருளாதார கருத்துநிலை” என்று கூறப்படுகிறது (Mathaiyan, 2011).

## மன்னனின் கடமை

மணிமேகலைக்காப்பியம் அரசாட்சியை அறநிலையைக் காக்கும் அரசாட்சி என்கிறது. அறநெறி கொண்ட ஆட்சியை வலியுறுத்துகின்றது. தவத்தையும் கற்பையும் காத்து நிற்கும் அரசாட்சியைப் போற்றுகின்றது. சங்க மருவிய காலம் மட்டுமல்லாது சங்ககாலம் முதலே இது வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

“நெல்லும் உயிரன்று நீரும் உயிரன்று

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்”

என புறநானூறு பாடல் மன்னனின் நல்லாட்சியை எடுத்தியம்புகின்றது (Puliyur kesigan, 2004).

“நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்

நாள்தொறும் நாடு கெடும்"

மன்னனின் கடமையை திருக்குறள் வலியுறுத்துகின்றது (Gowmarishwari, 2004).

இவ்வாறே மணிமேகலைக் காப்பியமும் மன்னனின் அறநெறி ஆட்சியை எடுத்துரைக்கின்றது. ஒரு நாட்டில் தவத்தோர் இல்லாவிட்டில் - கற்புடைய மகளிர் இல்லாவிட்டால் அந்நாட்டில் மழை பெய்யாது, மழையின்றேல் நாட்டின் வளம் குன்றும், நாட்டின் வளம் குறைந்தால் பஞ்சம் பிறக்கும், பஞ்சம் வந்தால் மக்களின் ஒழுக்கம் குறையும், மக்கள் மாண்டு மடிவர். ஆதலால், தவசிகளையும் பத்தினிப்பெண்டிரையும் காப்பாற்றுவது மன்னனின் கடமையாகும்.

சங்ககாலப் போர்முறைகளில் கூட அறங்கள் பின்பற்றப்பட்டன. பெண்கள், அந்தணர்கள், பசுக்கள், முதியவர்கள் போன்றோரை அக்கால மன்னன் பாதுகாப்பான இடங்களில் வைத்துப் பாதுகாத்தப் பின்னர்தான் போர் செய்ய முற்பட்டிருக்கின்றனர்.

மணிமேகலைக் காப்பியத்தில் நல்லாட்சியில்லாத நாட்டில் மக்களின் பாதுகாப்பும், பெண்களின் கற்பும், தனிமனித ஒழுக்கமும் கேள்விக்குறியாகிவிடும். பெண்களின் கற்புநெறி சிதையுமானால் ஒட்டுமொத்த மானிட இனமே அழியநேரிடும். இதற்கு மணிமேகலையில் வருகின்ற காருகமடந்தையின் கதை சான்றாகின்றது.

"எய்யா மையல்தீர்ந்து இன்உரை கேளாய்

ஆள்பவர் கலக்குற மயங்கிய நல்நாட்டுத்"

என வரும் மணிமேகலை சிறைவிடுகாதைப் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது (Thandapani Durai, 2005).

## மன்னனும் மக்களும்

அக்காலத்தில் மன்னராட்சி நடைபெற்ற காலமாக இருந்தாலும் குடிமக்களோடு இணைந்து செயல்பட்டனர். அக்கால மன்னர்கள் காப்பியத்தில் இந்திரவிழா பற்றிய குறிப்பு இடம்பெறுகின்றது. பூம்புகார் நகரம் பற்றிய செய்தி பழைய இலக்கியங்களிலிருந்தே கிடைக்கின்றது.

பண்டைய காலந்தொட்டே பூம்புகார் வரலாற்றுச் சிறப்புமிக்க நகராகும். பௌத்த சமயம் முதன்முதலில் செல்வாக்குப் பெற்ற இடமாக பூம்புகார் நகரம் இருந்திருப்பது அறிந்ததே. அப்படி சிறப்புமிக்க அந்நகரத்தைச் சீத்தலைச்சாத்தனார் முதல் காதையிலேயே குறிப்பிடுகின்றார். அந்நகரத்தில் அறநெறி ஆட்சி நடைபெற்றதாகவும், மன்னனும் மக்களும் வேறுபாடின்றி சரிநிகர் சமானமாக வாழ்ந்து வந்ததாகவும் எனப் பதிவு செய்கின்றனர். புகார் நகரில் நடக்கவிருக்கும் இந்திரவிழாவுக்குப் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்களும் ஒன்றுபட்டு ஆலோசித்தாகச் சொல்லப்படுகின்றது.

மெய்ப்பொருள், உலகியல், நல்ல தத்துவப்பொருள் வீடு என்னும் நால்வகைகளையும் அவரவர் இயல்புக்கும் திறத்திற்கும் ஏற்றவாறு விளக்கமாக உணர்த்துகின்ற சமயக்கணக்கர், தம்முடைய நெறிமுறையில் காலங்களைக் கணித்துக்கூறும் சோதிடர், இந்நகரைப் பிரியா உள்ளமுடையோராய் தம்முடைய உண்மையான ஒளி உருவை மறைத்து மனித உருவில் உலாவும் தேவர், பல தேயங்களிலிருந்து வந்து ஒருங்கே கூடி வாழும் பல்வேறு மொழிபேசும் வேற்று நாட்டார், அமைச்சர், புரோகிதர், சேனாதிபதியர், தூதுவர், சாரணர் என்போர் கூடிய ஐம்பெரும் குழுவினர், கரணத்தியலவர், கருமவிதிகள், கனகச்சுற்றம், கடைக்காப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரை வீரர் என்போர் கூடிய எண்பெருங்கூட்டத்தினர் ஆகிய இவர்கள் எல்லோரும் விழாக்கோள் எடுக்க ஒன்றாகக் கூடினர். இதனை,

"மெய்த்திறம் வழக்கு, நன்பொருள் வீடு எனும்

இத்திறம் தத்தம் இயல்பினின் காட்டும்

சமயக் கணக்கரும் தம்துறை போகிய

அமயக்கணக்கரும் அயலார் ஆகிக்

கரந்துஉரு எய்திய கடவுளாரும்

பரந்துஒருங்கு ஈண்டிய பாடை மாக்களும்

ஐம்பெருங் குழுவும் எண்பேர் ஆயமும்

வந்துஒழுங்கு குழீஇ, வான்பதி - தன்னுள்"

என வரும் மணிமேகலை - விழாவறை காதைப் பாடல்மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது (Thandapani Durai, 2005). இப்பதிவு ஒரு நாட்டில் ஆட்சி நடைபெற வேண்டிய விதத்தை எடுத்தியம்புகிறது. எல்லா தரப்பு மக்களையும் மதித்து நடக் வேண்டிய விதத்தையும், ஒற்றுமையையும் எடுத்தியம்புகின்றது.

மன்னன் நெறிபிறழ்ந்து செயல்பட்டால் ஏற்படும் விளைவுகளையும் மணிமேகலைக் கூறுகின்றது. அரசனுடைய நேர்மை நிலை பிறழ்ந்து செயல்பட்டால் கோள்களின் நிலை வேறுபடும். அவ்வாறு கோள்களின் நிலை மாறுபட்டால் நாட்டில் மழைபெய்யாது. அவ்வாறு மழைபெய்யாவிட்டால் நாட்டில் வளம் குறையும். அவ்வாறு வளம் குறைந்தால் உயிர்கள் அனைத்தும் வாழ வழியில்லாமல் தவிக்கும். இதுபோன்ற நிகழ்வு ஏற்பட்டால் சமூகம் மிகப்பெரிய சீரழிவை எதிர்நோக்கும்.

மன்னன் முறை தவறாமல் அறநெறி வயப்பட்ட ஆட்சியைச் செய்ய வேண்டும். மக்களையும், மகளிரையும் காத்து சமூகச் சீரழிவைப் போக்கி வழிநடத்த வேண்டும். இதனை,

"கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்

கோள்நிலை திரிந்திடின் மாறிவறம் கூரும்

மாரிவறம் கூரின் மன்உயிர் இல்லை

மன்உயிர் எல்லாம் மண்ஆள் வேந்தன்

தன்உயிர் என்னும் தகுதிஇன்று ஆகும்"

என வரும் மணிமேகலை துயிலெழுப்பிய காதைப் பாடல்வரிகள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது (Thandapani Durai, 2005).

மக்களிடமிருந்து அந்நியப்பட்டு நடத்தப்படும் ஆட்சி மக்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிடும். மணிமேகலைக்காப்பிய காலத்தில் களப்பிரர் என்றொரு புதியவர்களின் வரவால் ஆட்சிமுறை ஒழுங்கற்றதாக இருந்தது. ஆகையால் சீத்தலைச்சாத்தனார் அறநெறிப்பட்ட மக்களை மையமிட்ட ஆட்சியை விரும்பினார். அதன் பிரதிபலிப்புதான் இந்திரவிழா கொண்டாட்டத்திற்கு அரசர் முதல் அடித்தட்டு மக்கள் வரை அனைவரும் கலந்து கொண்டவாறு படைத்திருக்கின்றார்.

## மன்னனின் நோக்கம்

மன்னன் மக்களுக்காகவே இயங்க வேண்டும். மன்னனின் நோக்கம் மக்களைக் காப்பதாக இருக்க வேண்டும். சுயநலப்பட்ட வாழ்க்கைக்கு வழிவிட்டு விடாமல் பொதுநல வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். மன்னனின் நோக்கம் சரியாக இருந்தால் ஆட்சி பிழையில்லாமல் நடக்கும். சங்க மருவிய காலம் தமிழக வரலாற்றில் பல்வேறு குழப்பங்களைக் கொண்டது.

"அரசர் குடியில் பிறந்தோர் அரசுரிமை பெறினும், அரசாட்சியைத் திறம்பட நடத்துவதற்கு ஆற்றலும், அறநெறி மாண்பும், அரசியலறிவும் இன்றியமையாதன" (முத்துலக்குமி, 1999) என்று கூறுவது இங்கு நோக்கத்தக்கது.

ஒரு நாட்டினுடைய மன்னன் துறவு வாழ்க்கையை விரும்புகின்றான். அப்பொழுது அம்மன்னனுக்கு அமைச்சனாக இருந்த சனமித்திரன் துறவுபூண நினைத்த மன்னனுக்கு எடுத்துக்கூறிய கருத்துக்கள் அம்மன்னனை நல்வழிப்படுத்துகின்றது.

அரசன் உன்னை மகனாகப் பெறுவதற்கு முன்பு ஊர்கள் நிறைந்த இந்த நல்ல நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் மழைவளம் இல்லை. அதனால் எழுந்த பஞ்சத்திலே உயிர்கள் மடிந்தன. பெற்ற தாயும் பிள்ளையிடம் இரக்கங்காட்டாமல், அதைத் தின்னும் நிலை ஏற்பட்டது. அக்காலத்தில் காய்ந்த கடுங்கோடையில் நல்ல மழை பெய்தது போல நீ பிறந்தாய், நீ தோன்றிய பின்னர் இந்நாட்டிலே பிறந்த உயிர்களுக்கு எத்தகைய துன்பமும் இல்லை தவறாமல் மழை பெய்தது.

நிலத்தில் விளையும் செல்வத்துக்குக் குறைவில்லை. உடம்பைப்பெற்ற உயிர்கள் எல்லாம் பசியைக் காணாமல் வாழ்ந்தன. வாழ்கின்றன. நீ ஆட்சியைத் துறப்பாயானால், உனது நாட்டிலுள்ள உயிர்கள் எல்லாம் தாயைப் பிரிந்த குழந்தைகளைப்போலக் கூவி அழும். இத்தகைய துன்பம் தோன்றக் கூடிய உலகைக் காப்பதே உனது கடமை. காக்காமல் கைவிட்டு நீ மட்டும் உயர்ந்த உலகை அடைய விரும்புவாயானால் அது நீதி அன்று. உயிர்கள் எல்லாம் மாண்டு மடியும்படி விட்டு நீ மட்டும் இலாபத்தை விரும்புகிறவனாய் ஆவாய். இச்செயல் தன் உயிர்படும் துன்பத்திற்கு இரங்காமல், பிறவுயிர்களின் துன்பத்தைப் போக்கிக் காப்பாற்றும் புத்தருடைய அறநெறியாகாது. அதற்கு மாறானதாகும். இவ்வாறு அமைச்சன் அரசனுக்கு உரைத்தான். இதனை,

"நும்கோன் உன்னைப் பெறுவதன் முன்னாள்

பன்னீராண்டுஇப் பதிகெழு நல்நாடு

மன் உயிர் மடிய மழைவளம் கரந்து, ஈங்கு

ஈன்றாள் குழவிக்கு இரங்காள் ஆகித்

தான்தனி தின்னும் தகைமையது"

என வரும் மணிமேகலை - ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதைப்பாடல் வரிகள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது (Thandapani Durai, 2005).

## நீதி தவறாத மன்னர்களின் செயல்

புகார் நகரத்தை ஆட்சிசெய்த பண்டைய கால மன்னர்களில் திறம் மற்றும் நோக்கமும் மணிமேகலையில் சொல்லப்பட்டிருக்கின்றன. கரிகாற்சோழன், மனுநீதி சோழன் ஆகிய இருமன்னர்கள் பற்றிய செய்தி இடம்பெறுகின்றது.

கரிகாற்சோழனிடம் கருத்து மாறுபாடுடைய இருவர் நேரில் வழக்குரைக்க வந்தனர். அவர்கள் இருவரும் கரிகாற் சோழனுடைய இளமைப்பருவத்தினைக் கண்டனர். இவன் சிறுவனாக இருக்கின்றான். இவனால் எப்படி நீதி காணமுடியும் என்று பேசினர். அவர்களின் கருத்தையறிந்த கரிகாலச்சோழன் தனது இளமைப்பருவத்திற்கு நாணம் அடைந்தான். உடனே முதியவனைப் போல் வேடம் பூண்டான். முதியவன் வேடத்தில் வந்து வழக்குரைக்க வந்தவர்களிடம் வழக்குரைக்குமாறு கேட்டான். இருவருடைய சொல்லையும் ஆராய்ந்து அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படியான கருத்தை விளக்கிக் கூறினான். இதனை,

"இளமைநாணி முதுமை எய்தி

உரைமுடிவு காட்டிய உரவோன் மருகற்கு

அறிவும் சால்பும் அரசியல் வழக்கும்"

என வரும் மணிமேகலை - பளிக்கறை புக்க காதைப் பாடல் வரிகள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது (Thandapani Durai, 2005).

இதேபோன்று மனுநீதி சோழனின் மகன் தேரில் ஏறி நாடு நகரத்தைக் காணச்சென்ற போது, எதிர்பாராத விதமாக அங்கு சம்பவம் நிகழ்கின்றது. ஒரு பசுவின் கன்றானது துள்ளிக் குதித்து ஓடி வந்த தேர்ச்சக்கரத்தில் மாட்டி இறந்துவிடுகின்றது. மிகுந்த துன்பத்தை அனுபவித்த பசுவானது ஆராய்ச்சி மணியின் கயிற்றைத் தன் வாயால் கவ்வி மணியிலிருந்து ஒலியை எழுப்பியது. பசுவின்

நிலையை அறிந்த மனுநீதிச்சோழன் ஒரு முடிவுக்கு வந்தான். அந்தப் பசுவிற்கு நீதி வழங்கினான். எந்தத் தேர்ச்சக்கரத்தில் பசுவின் கன்று இறந்தது அதே தேர்ச்சக்கரத்தில் தன்னுடைய மகனை ஏற்றிக்கொன்று நீதியை நிலைநாட்டினான். இதனை,

"மகனை முறைசெய்த மன்னவன் வழிஓர்

துயர்வினை யாளன் தோன்றினன்" என்பது

வேந்தர் - தம்செவி உறுவதன் முன்னம்"

என வரும் மணிமேகலை - சிறைசெய் காதைப்பாடல்வரிகள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது (Thandapani Durai, 2005).

## முடிவுரை

மணிமேகலை காப்பியம் முதலில் தோன்றிய பௌத்தச் சமயக் காப்பியம். சங்ககாலச் சமூகம் சிதைந்து சங்கம் மருவிய காலம் தொடங்கிய காலக் கட்டத்தில் அரசியல், பொருளாதாரம், சமூகம், மக்களின் ஒழுக்கம் போன்றவை சமூகத்தில் தெளிவற்ற சூழல் நிலவியது. அப்போது தமிழகத்தில் சமணம், பௌத்தம், வைதீகம் போன்ற சமயங்கள் தோன்றின. இச்சமயங்களின் கொள்கைகள் மக்களின் மனக் குழுப்பத்தை தூண்டும் வகையில் அமைந்தன. வணிக வர்க்க சிதைவு, மன்னனின் கடமை, மன்னன் நீதி ஆட்சிமுறை மனிதநேய பண்பை உணர்த்தும் வகையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

## References

Gowmarishwari, S., (2004) Thirukkural, Saradha Pathippagam, Chennai, India.

Mathaiyan, (2005) Tamil Sevviyal Ilakkiyankal, New Century Book House Chennai, India.

Muttu Lakshmi, V., (2004) Pantaith Tamilar Varalarum, Ilakkiyankal, Anitha Pathippagam, Trichy, India.

Puliyur Kesigan, (1971) Purananuru, Pari Nilaiyam, Chennai, India.

Sellam, V.T., (2007) Tamilaga Varalarum Panbadum, Manivasakar Pathippagam, Chennai, India.

Thandapani Durai, (2005) Manimekalai Theliurai, Uma Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License